தினமணி 18/4/08.

# அமெரிக்கன் கல்லூரிப் பிரச்னை: கல்லூரி முதல்வர் மீது 'பிஷப்' தரப்பினர் புகார்

Pwrev

**மதுரை, ஏப். 17:** அமெரிக்கன் கல்லூரிச் சங்கத்தைக் கலைக்கும் முயற்சியில், அக் கல்லூரி முதல்வர் சின்னராஜ் ஜோசப் ஈடுபட்டு வருவதாக, பேராயர் கிறிஸ்டோபர் ஆசிர் தரப்பினர் புகார் தெரிவித்துள்ளனர்.

மதுரை திருமண்டிலத்தைச் சேர்ந்த பாதிரியார் கோயில்பிள்ளை, கேப்ரன்ஹால் பள்ளி நிர்வாகி ஹென்றி ஆசிர்வாதம், புனித ஜார்ஜ் ஆலயச் செயலர் மனுவேல் ஜெயராஜ், வழக்கறிஞர் பட்டுராஜன், ஓய்வுபெற்ற துணை ஆட்சியர் அருள் ஜீவராஜ் ஆகியோர், செய்தியாளர்களிடம் வியாழக்கிழமை கூறியது:

அமெரிக்கன் கல்லூரியானது 1934-ம் ஆண்டு சொசைட்டி அமைப்பாகப் பதிவு செய்யப்பட்டது. இதன் தற்போதைய தலைவராக உள்ள பேராயர் கிறிஸ்டோபர் ஆசிர், கல்லூரிச் சொத்தை விற்க முயல்வதாக சிலர் கூறிவருவது முற்றிலும் பொய்யான தகவல். கல்லூரிச் சொத்தை விற்கும் அதிகாரம், செயலர் பொறுப்பு வகிக்கும் கல்லூரி முதல்வருக்குத்தான் உண்டு.

இக் கல்லூரியின் முதல்வராக 2005-ம் ஆண்டு பொறுப்பேற்ற சின்னராஜ் ஜோசப், சங்கப் பதிவுகளையும், தணிக்கை அறிக்கைகளையும் பதிவு செய்யவில்லை. இதனால், அமெரிக்கன் கல்லூரிச் சங்கத்தைக் கலைக்க, மாவட்டப் பதிவாளர் மூலம் அரசுக்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

இக் கல்லூரி 'கவர்னிங் கவுன்சிலை' தனியார் வசம் ஒப்படைக்கும் வகையில், கல்லூரி முதல்வருக்கு அதிகாரம் கோரி சட்டத் திருத்தம் செய்ய சின்னராஜ் ஜோசப் முயற்சி செய்துள்ளார்.

இந்நிலையில், அவர், கடந்த ஏப்.9 முதல் மே 2 வரை விடுப்பு எடுக்க பேராயரிடம் அனுமதி கேட்டிருந்தார். இது ஏற்கப்பட்டதால்தான், ஏப்.10-ல் கல்லூரி முதல்வர் பொறுப்பில் இருந்த துணை முதல்வரை சங்கம் மற்றும் கல்லூரி நடவடிக்கைகளை முறைப்படிச் செய்ய பேராயர் உத்தரவிட்டார். ஆனால், துணை முதல்வரைப் பணி செய்ய விடாமல் அவரிடம் தகராறு செய்துள்ளார்.

இதுதொடர்பாக சின்னராஜ் ஜோசப் மீது சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும், அமெரிக்கன் கல்லூரியைத் தனியார் வசம் ஒப்படைக்கவும், இச்சங்கத்தைக் கலைக்கவும் விடமாட்டோம். இவ்விஷயம் தொடர்பாக தமிழக முதல்வரைச் சந்திக்கவும் உள்ளோம் என்றனர்.